DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai
CC 114 /2022

Deposition of LW5 examined as PW5
Dt. 02. 06. 2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாஸ்கர் | Caste | : | |
| Father's/Husband's Name | : | சௌந்தர்ராஜன் | Calling | : | |
| Village | : | குத்தாலம் | Religion | : | |
| Taluk | : | | Age | : | 54/2023 |

(Accused present.)

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது குத்தாலம் வசித்து குத்தாலம் பேரூராட்சியில் தூய்மை பணியாளாராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலானவர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரி கல்யாணராமன் எனக்கு தெரியும். கடந்த 07.09.2020ம் தேதி மாலை 5.00 மணியளவில் எனது மச்சான் முத்து வீட்டு வாசலில் சத்தம் கேட்டது. நான் என்னவென்று பார்த்தபோது ஆஜர் எதிரி அரிவாளுடன் வந்து எனது மச்சானின் முன் தலையில் வெட்டி விட்டு உயிருடன் விடமாட்டேன் கொன்றுவிட்டுதான் மறுவேலை பார்ப்பேன் என்று கூறிவிட்டு அவரது வீட்டிற்குள் சென்றுவிட்டார்.

2. நான் எனது மச்சானுக்கு சுய நினைவு இன்றி இரத்தம் வழிந்த நிலையில் இருந்தார். தலையில் வெட்டு காயமானது மண்டையின் முன் பக்கத்தில் பிளந்த நிலையில் இருந்தது. நாங்கள் எனது மச்சானை காரில் அழைத்து கொண்டு எனது தங்கை, முருகேசன், மாரிமுத்து, ஆகியோருடன் எனது காரில் அழைத்து கொண்டு மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு எனது மச்சானுக்கு ஒரு நாள் அரசு மருத்துவமனையிலும் அடுத்த நாள் வைரம் தனியார் மருத்துவமனையிலும் சிகிச்சை அளிக்கப்பட்டது. அவர் மொத்தமாக ஒருவாரம் சிகிச்சையில் இருந்தார். பின்னர் அடுத்த நாள் காலை 6.00 மணியளவில் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து என் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நான் சாட்சியாக கையெழுத்து செய்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** . என்னுடன் ராஜேந்திரன் என்பவரும் அதில் சாட்சியாக கையெழுத்து செய்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai
CC 114 /2022

Deposition of LW4 examined as PW4
Dt. 02. 06. 2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மாரிமுத்து | Caste | : | |
| Father's/Husband's Name | : | சௌந்தர்ராஜன் | Calling | : | |
| Village | : | குத்தாலம் | Religion | : | |
| Taluk | : | | Age | : | 43/2023 |

(Accused present.)

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது குத்தாலம் வசித்து குத்தாலம் பேரூராட்சியில் துப்புரவு பணியாளாராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரி கல்யாணராமன் எனக்கு தெரியும். கடந்த 07.09.2020ம் தேதி மாலை 5.00 மணியளவில் எனது மச்கான் முத்து வீட்டு வாசலில் சத்தம் கேட்டது. நான் என்னவென்று பார்த்தபோது ஆஜர் எதிரி அரிவாளுடன் வந்து எனது மச்சானின் முன் தலையில் வெட்டி விட்டு உயிருடன் விடமாட்டேன் கொன்றுவிட்டுதான் மறுவேலை பார்ப்பேன் என்று கூறிவிட்டு அவரது வீட்டிற்குள் சென்றுவிட்டார்.

2. நான் எனது மச்சானுக்கு சுய நினைவு இன்றி இரத்தம் வழிந்த நிலையில் இருந்தார். தலையில் வெட்டு காயமானது மண்டையின் முன் பக்கத்தில் பிளந்த நிலையில் இருந்தது. நாங்கள் எனது மச்சானை காரில் அழைத்து கொண்டு எனது அக்கா, கொழுந்தனார் முருகேசன், எனது அண்ணன் பாஸ்கரன் ஆகியோருடன் பாஸ்கரன் காரில் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து கொண்டு சென்றோம். அங்கு எனது மச்சானுக்கு ஒரு நாள் அரசு மருத்துவமனையிலும் அடுத்த நாள் வைரம் தனியார் மருத்துவமனையிலும் சிகிச்சை அளிக்கப்பட்டது. அவர் மொத்தமாக ஒருவாரம் சிகிச்சையில் இருந்தார். பின்னர் அடுத்த நாள் போலிசார் வைரம் தனியார் மருத்துவமனையில் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai
CC 114 /2022

Deposition of LW3 examined as PW3
Dt. 02. 06. 2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | முருகேசன் | Caste | : | |
| Father's/Husband's Name | : | கலியமூர்த்தி | Calling | : | |
| Village | : | குத்தாலம் | Religion | : | |
| Taluk | : | | Age | : | 52/2023 |

(Accused present.)

முதல் விசாரணை

நான் தற்போது குத்தாலம் வசித்து குத்தாலம் பேரூராட்சியில் பசுமை பணியாளாராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 எனது அண்ணி அண்ணன் ஆவார்கள். ஆஜர் எதிரி கல்யாணராமன் எனக்கு தெரியும். கடந்த 07.09.2020 ம் தேதி மாலை 5.00 மணியளவில் எனது அம்மாவின் கருமாதிக்கான பத்திரிக்கையை வீட்டு வாசலில் எனது அண்ணன் சுவற்றில் சாய்ந்தபடி நின்று கொண்டு எண்ணிக்கொண்டிருந்தார். நான் கருமாதிக்கான மளிகை ஜாமான்கள் வந்ததை வீட்டிற்குள் எடுத்து வைத்து கொண்டிருந்தேன். நான் வீட்டு வாசலில் வந்த போது திடிரென்று ஒரு சத்தம் கேட்டது என்னவென்று பார்த்தபோது ஆஜர் எதிரி அரிவாளுடன் வந்து எனது அண்ணன் தலையில் வெட்டி விட்டு கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறிவிட்டு அவரது வீட்டிற்குள் சென்றுவிட்டார்.

2. நான் எனது அண்ணன் இரத்தம் வழிந்ததை பார்த்தவுடன் எனக்கு அவரை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் மட்டும் தோன்றியது எனக்கு எதிரியை பிடிக்க தோன்றவில்லை. எனது அண்ணனை அழைத்து கொண்டு எனது அண்ணி, எனது அண்ணியின் அண்ணன் பாஸ்கரன், தம்பி மாரிமுத்து, ஆகியோருடன் பாஸ்கரன் காரில் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து கொண்டு சென்றோம். அங்கு எனது அண்ணனுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. எனது அண்ணன் ஒருவாரம் சிகிச்சையில் இருந்தார். போலிசார் மருத்துவமனைக்கு வந்து எங்களை விசாரித்தார்கள்.எனது அண்ணன் மயக்க நிலையில் இருந்ததால் எனது அண்ணியிடம் புகார் வாக்குமூலத்தினை போலிசார் பெற்றுக்கொண்டார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai
CC 114 /2022

Deposition of LW2 examined as PW2
Dt. 02. 06. 2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | முத்து | Caste | : | |
| Father's/Husband's Name | : | கலியமூர்த்தி | Calling | : | |
| Village | : | குத்தாலம் | Religion | : | |
| Taluk | : | | Age | : | 56/2023 |

(Accused present.)

முதல் விசாரணை

நான் தற்போது குத்தாலம் வசித்து இராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது Gail India Corporation குத்தாலத்தில் பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி ஆவார். ஆஜர் எதிரி கல்யாணராமன் எனக்கு தெரியும். அவர் எனது பக்கத்து வீட்டுகாரர் ஆவார். கடந்த 07.09.2020ம் தேதி மாலை 5.00மணியளவில் நான் அம்மாவின் கருமாதி பத்திரிக்கையை எனது வீட்டு வாசலில் சுவற்றில் சாய்ந்து நின்று கொண்டு எண்ணிக்கொண்டிருந்தேன். அப்போது திடிரென்று ஓடி வரும் சத்தம் கேட்டது. எதிரி குச்சிகாரி மகனே, தேவிடியா மகனே என்று கெட்ட வார்த்தைகளால் திட்டி கொண்டே வந்தார் நான் திரும்பி பார்த்தவுடன் எனது முன் தலையில் அரிவாளால் வெட்டி விட்டு நீ இராணுவத்தில் வேலை பார்த்தாலும், இப்ப எங்க வேலை பார்த்தாலும் சரி நீ போலிஸ்க்கு சென்றாலும் சரி உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்றும் கூறிவிட்டு அவரது வீட்டிற்குள் சென்றுவிட்டார்.

2. நான் அவரை பிடிக்கலாம் என்று முயற்சி செய்த போது எனக்கு இரத்தம் அதிகமாக வந்ததால் என்னால் பிடிக்கமுடியவில்லை. எனது மனைவி எனது மச்சான் பாஸ்கரன், மச்சான் மாரிமுத்து, தம்பி முருகேசன் ஆகியோரும் சம்பவ இடத்திற்கு வந்து எனது மச்சானின் காரில் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு எனக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது நான் ஒருவாரம் சிகிச்சையில் இருந்தேன். நான் மயக்க நிலையில் இருந்ததால் போலிசார் என் மனைவியிடம் விசாரணை செய்தார்கள். நான் அடுத்த நாள் வைரம் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். என்னை போலிசார் அடுத்த நாள் வைரம் மருத்துவமனையில் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai
CC 114 /2022

Deposition of LW1 examined as PW1
Dt. 02. 06. 2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பத்மாவதி | Caste | : | |
| Father's/Husband's Name | : | முத்து | Calling | : | |
| Village | : | குத்தாலம் | Religion | : | |
| Taluk | : | | Age | : | 47/2023 |

(Accused present.)

முதல் விசாரணை

நான் தற்போது குத்தாலம் வசித்து வீட்டு குடித்தனம் நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது பக்கத்து வீட்டுகாரர் ஆவார். கடந்த 07.09.2020 ம் தேதி மாலை 5.00 மணியளவில் எனது கணவர் எனது மாமியாரின் கருமாதிக்கான பத்திரிக்கையை வீட்டு வாசலில் நின்று கொண்டு எண்ணிக்கொண்டிருந்தார். நான் கருமாதிக்கான மளிகை ஜாமான்கள் வந்ததை வீட்டிற்குள் எடுத்து வைத்து கொண்டிருந்தேன். அப்போது திடிரென்று ஒரு சத்தம் கேட்டது. நான் வீட்டிக்குள் இருந்து வெளியில் வந்து பார்த்தபோது ஆஜர் எதிரி அரிவாளால் எனது கணவரின் தலையில் வெட்டி விட்டு கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறிவிட்டு அவரது வீட்டிற்குள் சென்றுவிட்டார்.

2. நான் எனது கணவரை இரத்தம் வழிந்ததை பார்த்தவுடன் எனக்கு அவரை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் மட்டும் தோன்றியது எனக்கு எதிரியை பிடிக்க தோன்றவில்லை. எனது கணவரை எனது அண்ணன் பாஸ்கரன், தம்பி மாரிமுத்து, கொழுந்தனார் முருகேசன் ஆகியோருடன் எனது அண்ணணின் காரில் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து கொண்டு சென்றோம். அங்கு எனது கணவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. எனது கணவர் ஒருவாரம் சிகிச்சையில் இருந்தார். போலிசார் மருத்துவமனைக்கு வந்து எங்களை விசாரித்தார்கள்.எனது கணவர் மயக்க நிலையில் இருந்ததால் நான் புகார் வாக்குமூலத்தினை போலிசாரிடம் கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலத்தினை நான் சொல்ல சொல்ல போலிசார் எழுதிகொண்டார்கள். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.